**செய்தி வெளியீடு எண்: 082** **நாள்: 31.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (31.1.2019) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், எதிர்வரும் கோடைகாலத்தில் தமிழ்நாட்டில் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ.158 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள்.**

வடகிழக்கு பருவமழையின்போது போதிய மழை இல்லாததை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாவது:

- அலுவலர்கள், நகர் மற்றும் கிராமப் புறங்களில் தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.

- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் வழங்கல் பணிகளை விரைவில் முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

- இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் அளவில் மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு வருகின்ற பிப்ரவரி மாதத்தில், குறைந்தபட்சம் மூன்று முறை சென்று, அங்கு நடைபெற்று வரும் குடிநீர் திட்டப் பணிகள், குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் எரிவது மற்றும் துப்புரவுப் பணிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

- மாவட்டங்களில் புதிய ஆழ்துளை கிணறுகளை அமைத்தல், ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளில் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை சீர் செய்தல், தூர்ந்து செயல்படாத ஆழ்துளை கிணறுகளை புதுப்பித்தல், தண்ணீர் இல்லாத ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு அமைப்பாக மாற்றுதல், போன்ற பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரில் வருகின்ற கோடைகாலத்தில், சீரான குடிநீர் வழங்க ஏதுவாக,சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு ரூ. 122 கோடியும், நகர மற்றும் கிராமப் பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ. 36 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**